27.11.2024

S.C.No. 21/2024

PW. 7 Tr. திரு. செல்வகுமார்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

நான் அரசு ஊழியர் என்றால் சரிதான். நான் SMRV பள்ளிக்கூடத்தில் NSS Program Officer ஆக இருப்பதால் வடசேரி காவல் ஆய்வாளரை எனக்கு ஏற்கனவே தொியும் என்றால் சரிதான். போதை விழிப்புணர்வு சம்பந்தமாக 29.08.2023 அன்று விழா நடத்துவதற்காக வடசேரி காவல் நிலையத்திற்கு போயிருந்தேனா என்றால் அனுமதி கேட்பதற்காக போயிருந்தேன். வடசேரி ஆய்வாளரிடம் முன் அனுமதி பெற்றுதான் அவரை பார்க்கப் போனேன் என்றால் சரியல்ல. ஆய்வாளரை பார்க்க போவதற்காக நான் பள்ளிக்கூடத்தில் எத்தனை மணிக்கு சென்று அனுமதி பெற்றேன் என்றால் 9.45 மணி இருக்கும். வடசேரி காவல் நிலையத்திற்கு நான் எத்தணை மணிக்கு போய் சேர்ந்தேன் என்றால் 9.55 இருக்கும். நான் திரும்ப பள்ளிக்கூடத்திற்கு எத்தனை மணிக்கு வந்து சேர்ந்தேன் என்றால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. நான் எந்த வகுப்பிற்கு பாடம் எடுப்பேன் என்றால் 11 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கு எடுக்கிறேன். அன்றைய தினம் அதன் பிறகு பள்ளிக்கூடம் சென்று பாடம் எடுத்தேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் பாடம் எடுக்கவில்லை. அன்றைய தினம் நான் எத்தனை மணி வரை நான் பள்ளிக்கூடத்தில் இருந்தேன் என்றால் 4.45

மணி வரை இருந்தேன். நான் 9.55 மணிக்கு வடசேரி காவல் நிலையம் சென்ற நேரத்தில் ஆய்வாளர் இருந்தாரா என்றால் ஆமாம். ஆய்வாளர் திருமுருகன் இருந்தார். அங்கே எதிாி இருந்தாரா என்றால் இருந்தார். லாக்அப்பில் இருந்தார். எதிாியை லாக்அப்பில் உள்ளே வைத்துதான் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் இல்லை. லாக்அப்பிற்கு வெளியே ஸ்டேசனில் வைத்து விசாாித்தார். அப்போது நானும் அருகே இருந்தேனா என்றால் ஆமாம். என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் உதயகுமார் இருந்தார். எதிாி சொன்னதை யார் எழுதியது என்றால் ஆய்வாளர் லேப்டாப்பில் தட்டச்சு செய்தார். சுமார் எவ்வளவு நேரம் தட்டச்சு செய்தார் என்றால் 20 முதல் 30 நிமிடம் இருக்கும். அந்த இரு சக்கர வாகனம் எங்கே நிறுத்தப்பட்டிருந்தது என்றால் காவல் நிலையத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டது. அதை யார் கொண்டு வந்து நிறுத்தியது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வடசேரி காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு ஆராட்டு ரோட்டிற்கு கூட்டிச் சென்றார்கள் என்றால் 11.50 மணிக்கு கூட்டிக் சென்றார்கள். அங்கு எத்தனை மணிக்கு போய் சேர்ந்தோம் என்றால் 10 நிமிடத்தில் போய் சேர்ந்தோம். அங்கே எவ்வளவு நேரம் என்னை நிறுத்தி வைத்திருந்தார்கள் என்றால் ஒரு 10 நிமிடத்தில் எதிாி எடுத்து கொடுத்தவுடன் வந்து விட்டோம். அதன்பிறகு நான் பள்ளிக்கூடத்திற்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை. ஸ்டேசனுக்கு வந்து விட்டு, அங்கு சிறிது நேரம் இருந்துவிட்டு, அத்தாட்சியில் எல்லாம் கையொப்பம் செய்துவிட்டு, அதன்பிறகு வீட்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு பள்ளிக்கூடம் சென்றேன். நான் ஆய்வாளரை சந்திக்க பள்ளிக்கூடத்தில் எழுத்து பூர்வமாக

அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை. தலைமை ஆசிரியரிடம் சொல்லிவிட்டு வந்தேன். எங்கள் பள்ளிக்கூடம் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடமா என்றால் ஆமாம். அரசு உதவி பெறும் பள்ளிக்கூடம், தனியார் பள்ளிக்கூடம் எல்லாம் அரசு விடுமுறை நாட்களில் இயங்காது என்றால் சரிதான். அரசு விடுமுறை நாட்களில் தலைமை ஆசிரியரோ, நானோ, மாணவர்களோ மற்ற ஆசிாியர்களோ பள்ளிக்கூடம் செல்லமாட்டோம் என்றால் தேவை இருந்தால் செல்வோம். அரசாங்கம் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை அளித்தால் அன்றைய தினம் பள்ளிக்கூடம் இயங்காது என்றால் சரிதான். இந்த மாவட்டத்தை பொறுத்தவரையில் சுசீந்திரம் தேரோட்டம், சவேரியார் கோவில் திருவிழா, ஓணம் திருவிழா, தக்கலை தர்கா திருவிழா ஆகியவற்றிற்கு உள்ளூர் விடுமுறை வழக்கம் உண்டு என்றால் சரிதான். அந்த உள்ளூர் விடுமுறை நாட்களில் கண்டிப்பாக பள்ளிக்கூடம் இயங்கும் வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் ஆய்வாளரை பார்க்க சென்ற 29.08.2023 அன்று ஓணம் பண்டிகைக்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை என்று எனக்கு தொியுமா என்றால் தொியாது. வடசேரி காவல் ஆய்வாளர் திரு. திருமுருகன் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதாலும் இந்த வழக்கிற்காக அவருக்கு வேண்டியவரை சாட்சியாக போட வேண்டும் என்பதாலும் 29.08.2023 அன்று பள்ளி விடுமுறை என்பதை கூட யோசிக்காமல் ஒரு ஆசிரியர் என்பதையும் தாண்டி, ஆய்வாளருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில், இந்த நீதிமன்றத்தில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அரசு உத்தரவை மீறி 29.08.2023 அன்று எங்கள் பள்ளி இயங்குகியதா என்றால் அன்றைய தினம்

விடுமுறை என்பது நினைவு இல்லை. அனுமதி கேட்பதற்காக பள்ளிக்கூடம் சென்றேன். எங்கள் பள்ளிக்கூடத்தில் உள்ள வருகைப் பதிவேட்டை தேவைப்பட்டால் என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னால் தாக்கல் செய்ய முடியாது. தலைமை ஆசிரியர் வேண்டுமானால் தாக்கல் செய்யலாம். நான் சொன்ன மாதிரி, 29.08.2023 அன்று வடசேரி காவல் நிலையத்திற்கோ, ஆராட்டு ரோட்டிற்கோ, நான் போகவில்லை என்றாலும் அன்றைய தினம் ஓணம் பண்டிகை என்பதால் விடுமுறை நாள் என்பதால் நான் வீட்டில் இருந்து கொண்டு, ஆய்வாளர் தயார் செய்த ஆவணங்களில் நான் ஆய்வாளருக்கு ஆதரவாக கையொப்பம் செய்துவிட்டு இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.